[18th January 1964

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அனுவசியமாக கேஸ் போடுகிறார்கள் என்பதை என்றால் ஒத்துக்கொள்ள முடியாது, அந்தமாதிரி இருந்தால் குறிப்பிட்ட சம்பவத்தை எடுத்து, குறிப்பிட்ட இலாகாவுக்கு அனுப்பினால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆள் இழுக்கும் ரிக்ஷாக்களையே எடுத்துவிடுவது என்று அரசாங்கம் முடிவு செய்தாலும், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாத வகையில் ஆட்டோ ரிக்ஷாக்களையாவது நிறுத்தி வைக்க முடியுமா? டாக்ஸிகளில் போய் வருவது என்பது சாதாரண மக்களுக்கு முடியாது இருக்கலாம். ஆகவே ஆட்டோ ரிக்ஷாக்களைப் பாதிக்காத அளவுக்கு முயற்சி எடுக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆட்டோ ரிக்ஷாக்களை அனுமதிப்பதில்லை என்று முடிவு செய்துவிட்டதால் வேறு முயற்சிகளைத்தான் செய்ய வேண்டும். ஆட்டோ ரிக்ஷாக்களை அனுமதிப்பது சரியல்ல. அந்தப் பிரச்னை வருகின்றபோது சர்க்கார் பஸ்களிலேயே சாமான்களை ஏற்றிச் செல்லக்கூடிய அளவிற்கு முயற்சி செய்யலாம்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது டாக்ஸிகளை யார் ஏற்படுத்த வந்தாலும் அனுமதி வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஏற்கனவே ப்ளீட் நடத்தி வந்தவர்கள் சரியாகக் கட்டி வரவில்லையென்று டாக்ஸி ஓட்டுவதை நிறுத்தி வருகிறார்கள். பெற்ற அனுமதியைக் கூட வேண்டாமென்று விட்டு வருகிறார்கள். ஆகையால் தான் ஆட்டோ ரிக்ஷா மிகவும் முக்கியமாக இருக்கிறது. இது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினர் தம் அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொள்கிறார்கள். சர்க்காரைப் பொறுத்த வரையில் ரிக்ஷாக்களை ஒழிப்பது என்பது திட்டவட்டமாகச் செய்யப்பட்ட முடிவு. அதை மாற்றுவதற்கில்லை.

Extension Officers (Industries)

* 34 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that one year training is given to Extension Officers (Industries) selected direct by the Director of Industries and Commerce and not selected by the Public Service Commission;

(*b*) if so, for how many candidates such training is given in 1963;

(*c*) the amount spent for each candidate; and

(*d*) the details of the training given to the candidates and the benefits derived by the Government or by the candidates thereby?

18th January 1964]

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) No.

(*b*) & (*c*) Do not arise.

(*d*) The candidates are given training as follows :—

(1) Understudy training in the blocks :	About 3 months.
(2) Training at a Small Industries Service Institute.	4 months.
(3) Training at Khadi Gramodyog Vidyalaya.	8 months.

The training is intended to give the candidates theoretical as well as practical knowledge in the organisation, and working of Village and Small-Scale Industries which will enable proper discharge of their duties as Extension Officers (Industries).

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கைத்தொழில் விஸ்தரிப்பு அதிகாரிகள் பி. டி. ஓ-வாகப் பிரமோஷன் செய்யப்படுவதில்லை என்பது உண்மையா? அப்படி இருந்தால் அவர்களைப் பி.டி.ஓ.-வாகப் பிரமோஷன் செய்ய உத்தரவிட முடியுமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இந்தக் கேள்வி மூலக் கேள்வியில் இருந்து எழாது. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

முதல்நிலை தமிழாசிரியர்கள் (பதவி உயர்வு)

* 35 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் முதனிலைத் தமிழாசிரியர்களாகப் பணியாற்றும் அனைவரும் தலைமை ஆசிரியர் ஆவதற்குத் தகுதியுடையோராவர் என ஆணை பிறப்பிக்குமாறு கோரி மாநிலத் தமிழாசிரியர் கழகம் அரசாங்கத்திற்கு வேண்டுகோள் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது அரசாங்கம் எடுத்துக்கொண்ட முடிவு என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The matter is under consideration.

புலவர் கா. கோவிந்தன்: அப்படி தலைமை ஆசிரியர்களாகப் பணி புரிகிறவர்கள் எத்தனை பேர்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, முதல்நிலைத் தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியராக நியமிககப்படுவார்கள் என்று முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். பொதுவாக அப்படி உத்தரவிட்டிருந்தாலும் பானல் லிஸ்டில் கூட அவர்கள் சேர்க்கப்படுவதில்லை என்று சொல்வது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அப்படிப் புகார் ஒன்றும் வரவில்லை.